**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் எனபவற்றிற்கு முகாமைத்துவத்தும் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாரள அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பினிவரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்.

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் கீழ் உள்ள 04 உத்தியோகத்தர் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் | வருடத்திற்கான அனைத்து செலவுகளும் முறையாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்திற்கு இணைக்கப்பட்டு அத் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் சம்பளமாக ரூபா 1,699,350 செலுத்தப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டுள்ள சம்பளம், நிதியத்தின் வெலவினமாக இணங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் மிகை ரூபா 1,699,350 ஆல் மேலதிக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வாகனப்புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் மூலம் சம்பளம் வழங்கப்படுகின்றது. 2022 ஆம் வருடத்திலிருந்து திணைக்களத்தினால் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் சம்பளம் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதியம் பேணப்பட்டு வருவதற்குத் தேவையான நீர், மின்சாரம் மற்றும் வீதவரி போன்ற பொதுப் பணிகள் செலவுகளுக்காக மீளாய்வாண்டிற்கான செலவுகள் இனங்காணப்பட்டு அச் செலவுகள் கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட செலவுகள் கணக்கிடப்படாததுடன் கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ளதன் படி சில முறைகளின் பிரகாரம் இச் செலவுகள் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருடத்திற்கான அனைத்து செலவுகளும் முறையாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**1.5.2 நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் கழிவுப் புகை வெளியேற்றல் பரீட்சிப்புப் பொறுப்பு நிதியத்தினை மூடுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் திறைசேரிச் செயலாளரின் 2018 ஒகஸ்ட் 18 ஆம் திகதியிலான 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க, சுற்றறிக்கையின் பிரகாரம் முடிவுறுத்துபவர் ஒருவரை நியமித்து சொத்துக்களிலிருந்து பொறுப்புக்களைத் தீர்த்து மீதியை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதியத்திற்குச் சொந்தமான சேமிப்பு வைப்பின் | நிதியத்தினை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திறைசேரியின் பிரதி செயலாளரின் தலைமைத்துவத்தில் நம்பிக்கைப் பொறுப்பு சபை கூடி குறித்த நிதியத்திற்காக அமைச்சரவையின் தீர்மானத்தினை பெற்றுக்கொள்ளும் வரையிலும் நிதியத்தினை பேணிச் செல்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. போக்குவரத்து | குறித்த சட்ட ரீதியிலான சூழலினுள் தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றல். |

| | | |
|---|---|---|
| பெறுமதி மட்டுமே ரூபா 259 மில்லியன் ஆகும். நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த இந்த நிதியத்தின் இரு தரப்பில் திறைசேரி செயலாளர் ஒரு தரப்பினராவார். நிதியத்தினைத் தாபித்த பொறுப்பு உறுதியின் 11 (அ) பந்தியின் பிரகாரம், திறைசேரி செயலாளரினால் வெளியிடப்பட்டதன் அடிப்படையில் இது வரையிலும் குறித்த உடன்படிக்கை ஒப்பந்தத்திலிருந்து ஒரு தரப்பினர் வெளியேறியுள்ளனர். இதனால் நிதியத்தினைப் பேணுவது சட்ட ரீதியான சிக்கலுக்குள்ளாகி உள்ளது. இதன் காரணமாக திறைசேரியின் பிரதி செயலாளரின் தலைமைத்துவத்தில் நம்பிக்கைப் பொறுப்பு சபை கூடி குறித்த நிதியத்திற்காக அமைச்சரவையின் தீர்மானத்தினை பெற்றுக்கொள்ளும் வரையிலும் நிதியத்தினை பேணிச் செல்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | அமைச்சருக்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிப்பதற்கு கோரப்பட்டுள்ளது. | |

**1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் நிதியம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து படிகள் பெறப்பட்டிருந்த போதிலும், அப் படிகள் பெறுவதற்கான சட்டரீதியான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மீளாய்வாண்டில் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த தொகை 142,000 ஆகும். | நிதியம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கட்டுப்பாட்டுச் சபையினருக்கு படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது பீஈடீ/03/2015 மற்றும் யூன் 17 ஆம் திகதிய சுற்றறிக்கை பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்கான படிகள் செலுத்தப்படுவதற்கான அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டபூர்வ அங்கீகாரத்துடன் மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளளப்பட வேண்டும். |
| (ஆ) | புகை பரீட்சித்தல் மேற்கொள்ளும் கம்பனியில் அறவிடப்படுகின்ற கட்டணங்களைப் பரிசோதனை செய்வதற்காக காணப்படுகின்ற | 2021 ஆம் வருடத்தில் தரவு முறைமையை மீண்டும் நிறுவப்படுவதற்கு தேவையான | வருமானம் முறையாகச் சரி பார்க்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தகவல் முறைமை (ICTA) விளைவற்று காணப்பட்ட காரணத்தினால் அக் கம்பனியினால் பெறப்படுகின்ற தகவல்களின் சரியான தன்மையை பரீட்சித்து அரசிற்கு கிடைக்க வேண்டிய வரமானம் சரியாகப் பெறப்படுகின்றதா என்பதைப் பரிசோதிப்பதற்காக முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படவில்லை. அக் காரணத்தினால் புகை பரீட்சித்தல் மேற்கொள்ளும் கம்பனிகளால் நிதியத்திற்கு அனுப்பபடுகின்ற ரூபா 272,112,255 ஆன தொகையை கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நடவடிக்கைகளை எடுக்குமாறு எம்மால் ICTA நிறுவனத்திடம் கோரிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் புதிதாகப் பெறப்படுவதற்கு திட்டமிடப்பட்ட ERL 2 செயற்திட்டத்திற்காக இக் குறைபாடுகளைப் போக்குவதற்காக புதிய திட்டங்கள் ICTA இற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வருடாந்தம் வழங்கப்படுகின்ற இறைவரி அனுமதிப்பத்திரங்களின் அளவு போன்ற தகவல்களும் ICTA நிறுவனத்தின் மூலம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) மீளாய்வாண்டின் இறுதி வரை நிதியத்திற்குச் சொந்தமான 05 கூறுகளின் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 55.95 மில்லியன் என்பதுடன் அந்தந்த சொத்துக்களை குறிப்பாகச் சரிபார்க்க கூடியவாறு சொத்துக்கள் பதிவேடானது நாளதுவரையாக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு வருகின்றது நிலையான சொத்துக்களைக் குறியீடு செய்வதும் பதிவேட்டை நாளது வரையாக்கும் அதே நேரத்திலேயே செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முறையாக நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வளி மாசடைதல் மதிப்பீடு தொடர்பான ஆராய்ச்சி அறிக்கைக்கு இலங்கை அங்கீகார சபை, பேராதனை மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களுக்கு ரூபா 2,550,847 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கான பணிகள் அற்நிறுவனங்களினால் இதுவரை நிறைவேற்றப்படாமையால் இக் கொடுப்பனவுகள் முன்கூட்டிய கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் தற்போது | புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக பணம் அறவிடப்பட்டிருந்த, பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளுக்கான சகல அறிக்கைகளும் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. | விரைவில் உரிய அறிக்கை பெறப்பட்டு கொடுப்பனவுகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தாமதகாலம் 04 வருடங்கள் தாண்டியுள்ள போதிலும் இக் கொடுப்பனவுகள் தீர்க்கப்படுவதற்கு நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை அங்கீகார சபைக்கு நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள பணம் அவர்களால் பயன்படுத்தப்பட்டமை வாகனப் புகை பரீட்சித்தல் நிலையங்களை பரீட்சிக்கும் உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக என்பதுடன், அவற்றின் செலவு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 01/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச்சுற்றறிக்கை மற்றும் நி.பி 876 2(அ) | தற்போது நிதியத்தின் செயற்பாடு தேசிய நலன் சார்ந்தது எனத் தோன்றினால் மற்றும் அந் நிதியம் முறையான சட்டமொன்றின் மூலம் பாராளுமன்றத்தில் அங்கிகரிக்கப்பட்டிருக்காவிட்டால் அந் நிதியத்திற்காக இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டு ஒரு வருடத்திற்குள் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் இதுவரை நிதியத்தினால் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரிப் பிரதிச் செயலாளரின் தலைமையில் நம்பிக்கைப் பொறுப்புச் சபை கூடி நிதியத்தின் நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டு அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்படும் வரையில் நிதியத்தைப் பேணிச் செல்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. போக்குவரத்து அமைச்சருக்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிப்பதற்கு கோரப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 877(2) ஈ | கணக்காண்டு நிறைவடைந்து 02 மாதங்களினுள் செயலாற்றல் அறிக்கைகளை தயாரித்து அரச நிதிப் பணிப்பாளருக்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறான செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. அது இதுவரையில் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் எதிர்காலத்தில் அது குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயலாற்றல் விளைவு ரூபா 248,572,349 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 250,382,868 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 1,810,519 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டின் வருமானம் ரூபா 15,550,291 இனால் குறைவுற்றமை இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 10 ஆந் திகதிய மற்றும் MT/02/01/01/02/11/II ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பிரிவொன்றாக நிறுவப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட புகை பரீட்சித்தல் செயற்திட்ட அலுவலகத்திற்காக பதவிகள் அங்கீககரிக்கப்பட்டிருந்ததுடன், இது வரையில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கான போதியளவு செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணிகளுக்கான பதவிப் பெயர்கள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் 2017.12.10 ஆந் திகதிய மற்றும் MT/02/01/01/02/11/II ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (இணைப்பு 07 ) பிரகாரம் செயற்திட்ட அலுவலகத்துக்கான பதவிகள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட சேவையிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தமையால் இதுவரையில் நம்பிக்கைப் பொறுப்புச் சபையில் சேவையாற்றும் அதிகாரிகள் அச்சேவைகளுக்கு உள்ளரீர்க்கப்படுதல் தொடர்பான பிரச்சினையொன்று எழுந்துள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின கடிதத்தின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின சில்லறைக்காசு முற்பணம் மற்றும் எரிபொருள் முற்பணம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தும் அம் முற்பணங்கள் முற்பணப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு அறிக்கையிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் முற்பணம் வழங்கப்பட்ட போது போதியளவு உள்ளகக் கட்டுப்பாடொன்று மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சில்லறைக்காசு மற்றும் எரிபொருளுக்காக தனித்தனியாக முற்பணம் பெறப்பட்டிருந்தும் அதற்காக வேறு வேறாகச் செலவுப் பொழிப்பொன்று பேணிச் செல்லப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் 2022 ஆம் வருடத்திலிருந்து சில்லறைக்காசு மற்றும் எரிபொருள் முற்பணங்களுக்காக தனித்தனியான முற்பண பதிவேடுகள் பராமரிக்கப்படும். | சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டிற்கு தேவையான நடைமுறைகளைத் தீர்மானித்தல். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 ஆரம்பச் செலவுக் கூறுகள் மேலதிக மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் 37 சதவீதத்திலிருந்து 83 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டத. | நாட்டில் நிலவிய COVID – 19 தொற்று நோய் நிலைமை காரணமாக திட்டமிட்டபடி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தமையால் எதிர்வரும் வருடத்தில் பாதீடு ஆக்கபூர்வமாக முகாமைத்துவம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மூலதன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒன்பது (09) செயற்திட்டங்களுக்காக ரூபா 46 மில்லியனுக்கான செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்தும் அவற்றில் இரு செயற்திட்டங்கள் மட்டுமே செயற்படுத்தப்பட்டு அவற்றுக்காக ரூபா 697,288 ஆன தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி மொத்தப் பாதீட்டுச் செலவுகளுடன் ஒப்பிடும் போது 71 சதவீதமான அளவில் மதிப்பிடப்பட்டிருந்தது. அன்றாடத் தேவைகளுக்காக மீண்டெழும் செலவுகள் மட்டும் செலவிடப்பட்டு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எவ்வித அபிவருத்திப் பணிகளையும் மேற்கொள்ளாது நிதியம் பேணப்பட்டு வருதல் பொருளாதார ரீதியில் பயனுள்ளதா என்ற சிக்கல் எழுந்துள்ளது. | நிலவிய COVID – 19 தொற்று நோய் நிலைமை காரணமாக திட்டமிட்டபடி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தமையால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. தவறவிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் முன்கொண்டு செல்லப்படுகின்றன. அதன் பிரகாரம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் சுயாதீன ஆய்வுகள், பங்குதாரர் நிறுவனங்கள் கொண்டு வருகின்ற செயற்திட்டங்களுக்காக ஒதக்கங்கள் ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. | இனங் காணப்பட்ட இலக்குகளை பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |